**11.01.2024–ந் தேதி நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கையின் நகல்**

## தேவகோட்டை நகராட்சி.

## <u>அவசரக்கூட்டம்.</u>

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் 11.01.2024–ம் தேதி வியாழக்கிழமைகாலை 12.00 மணிக்கு அவசரக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

**<u>பொருள் – 448</u>**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் திருச்சி – இராமேஸ்வரம் சாலையில் அமைந்துள்ளது. இப்பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்தம் 14 எண்ணங்கள் உள்ளது. தற்போது சி தர பேருந்து நிலையமாக உள்ளது. பேருந்து நிலையத்தில் மொத்த கடைகளின் எண்ணிக்கை 48 ஆகும். ஒரு உணவகம் மற்றும் காத்திருப்பு கொட்டகையும் உள்ளது. இப்பேருந்து நிலையத்தில் பொதுக்கழிப்பிடம் மற்றும் கட்டண கழிப்பிடம் ஒன்றும் உள்ளது. தினசரி 300 பேருந்துகள் வந்து செல்கின்றன. தற்போது தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகளின் கீழ் இந்நகராட்சி பேருந்து நிலையத்தை அனைத்து கட்டமைப்புகளுடன் மேம்படுத்திட அறிவிப்பு வெளிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பேருந்து நிலையம் அமைந்துள்ள இடமான வார்டு–I, பிளாக்–2, டி.எஸ்.எண். 2, 3, 4/2P, 6P ஆகிய சர்வே எண் கொண்ட பேருந்து நிலைய இடத்தினை நவீனமாக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் அமைத்து விரிவாக்க பணிகள் செய்திட மதிப்பீடு தயார் செய்யவும் அரசிடமிருந்து முழு மானியமாக நிதி வழங்க கோரி நிர்வாக அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மதிப்பீடு தயார் செய்ய உரிய ஒப்பந்தம் கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 448– அனுமதிக்கப்பட்டது.**

––

**<u>பொருள் – 449</u>**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1ல் இராம் நகர் பகுதி அமைந்துள்ளது. இப்பகுதி சற்று மேடான பகுதியாக இருப்பதால் நீரழுத்த குறைவு காரணமாக இப்பகுதிக்கு முழுமையாக கிடைக்கப்பெறுவதில் சிரமம் உள்ளது. மேலும் நகர் விரிவாக்க பகுதியாக உள்ளது. தற்போது குடிநீர் சீராக அனைத்து வீடுகளுக்கும் கிடைப்பதில்லை. எனவே இப்பகுதிகளில் சிறிது குடிநீர் தட்டுப்பாடு

நிலவுகின்றது. மேற்காணும் இராம்நகர் பகுதியில் அமைந்துள்ள சோமசுந்தரம் நகரில் புதிதாக ஆழ்துளைக்குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி சோமசுந்தரம் நகர் பகுதியில் புதிதாக ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்திட ரூ.8,00,000/– க்கு தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 449– அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 450</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஊரணிகள் மற்றும் பூங்கா மேம்படுத்துதல் பணியினை 2023 – 24ம் ஆண்டு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள கீழ்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பபட்டு நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

| Sl.No | Work Details | Estimate (in Lakhs) |
|---|---|---|
| 1. | Improvement of Eravuseri Oorani at Ward-A,Block – 7,T.S No.25 in Devakottai Municipality | 73.00 |
| 2. | Improvement of Arunachala poigai Oorani at Ward-G,Block – 3,T.S No.6 in Devakottai Municipality | 43.00 |
| 3. | Improvement of Karutha Oorani at Ward-C, Block – 13,T.S No.3 in Devakottai Municipality | 42.00 |
| 4. | Improvement of Selvapuram Park at Ward-A,Block – 19,T.S No 46,47,48,49,50,51,52,60,68,69,76,77 in Devakottai Municipality | 38.00 |

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ)மேற்காணும் பணிகளை அம்ரூத் 2.0 திட்டம் அல்லது அரசு வழங்கும் திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 450– அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 451</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21ல் ஆயுர்வேத மருத்துவமனை வளாகத்தினுள் உயர்மட்ட நீர்தேக்க தொட்டி அமைந்துள்ளது. நீர்தேக்க தொட்டி முன்புறம் சுவர் இல்லாமல் பாதுகாப்பு இன்றி உள்ளது. நீரேற்று மோட்டார்கள் மற்றும் அதற்கான மின் வயர்கள் திறந்த வெளியிலேயே உள்ளது. இரவு நேரங்களில் வெளியாட்கள் உள்ளே சென்று மின் வயர்களை அறுத்தும் மற்றும் மோட்டார்களை திருடி செல்லவும் வாய்ப்புள்ளது. மேற்படி பணியின் அவசியம்

கருதி சுவர் எழுப்பி இரும்பு கதவு அமைப்பது அவசியமாகிறது. மேலும் இராம்நகர் உயர்மட்ட நீர்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள மோட்டார் இயக்கும் அறை புதிதாக கட்டப்பட்டுள்ளது. பழைய மோட்டார் இயக்கும் அறையில் மோட்டார் மின் மாற்றிகள் மற்றும் சாதனங்கள் உள்ளன. பழைய மோட்டார் இயக்கும் அறை ஆபத்தான இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே அவற்றை புதிய மோட்டார் இயக்கும் அறைக்கு மாற்றம் செய்து மின் இணைப்பு கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்காணும் இரண்டு பணிகளின் அவசியம் கருதி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 451– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 452

தேவகோட்டை நகராட்சியில் மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்டமான மக்களின் குறைதீர்க்கம் சிறப்பு முகாம் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளையும் ஒருங்கிணைத்து நடத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21335/2021/எம்2, நாள் – 14.11.2023 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர், சிவகங்கை அவர்களின் கடிதம் ந.க.எண்.31917/2023, நாள் – 05.12.2023 என இரண்டு சுற்றறிக்கையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட 5 இடங்களில் 27 வார்டுகளையும் ஒருங்கிணைத்து மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. 5 முகாம்களிலும் தேவையான மொத்த கணினிகள் – 40, பிரிண்டர்கள் – 25, பிரிண்டர் டோணர்கள் – 2500 பக்கங்கள், இரண்டு வண்டிகள் போக்குவரத்து செலவீனம் மற்றும் ஓட்டுநர் படி என வாடகைக்கு சப்ளை செய்த Hameedheen Enterprises Private Limited மதுரை நிறுவனத்திற்கு ரூ.1,84,386/–ம், பிஎஸ்என்எல் நெட்ஒர்க் கனெக்ஷன் – 5 எண்ணம், ஏர்டெல் நெட்ஒர்க் கனெக்ஷன் – 5 எண்ணம், Nemax Electronics, Devakottai நிறுவனத்திற்கு ரூ.54,000/–ம், மைக்செட், சாமியான பந்தல், டேபிள் நாற்காலிகள், குடிநீர் என வாடகைக்கு எடுத்தது ரூ.58,000/–ம், என மொத்தம் ரூ.2,96,386/–ஐ முகாம் நடத்தி முடிக்கப்பட்டதற்கான வாடகைச் செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 452– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 453

வடகிழக்கு பருவமழையால் தூத்துக்குடி மாவட்ட பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு குடிநீர் லாரி இயக்கக்கூடிய பணியாளர்கள்

மற்றும் குடிநீர் லாரி அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.6002/2023/பி1, நாள் – 20.12.2023ந் தேதிய கடிதத்தில் கோரப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சி குடிநீர் நீர்தேக்க தொட்டி காவலர் திரு மதுரைவீரன் மற்றும் வாடகை குடிநீர் லாரி அருள் ஜோதி வாட்டர் சப்ளை வாகனம் எண்.TN-59AP-0429, 8000 லிட்டர் கொள்ளளவு ஒன்றும் ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. 21/12/2023 தேதியிலிருந்து 28/12/2023 வரை அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து பணி மேற்கொண்டதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.6,000/–ம் வீதம் 8 நாட்களுக்கு ரூ.48,000/–ம் அருள் ஜோதி வாட்டர் சப்ளை நிறுவனத்திற்கு வழங்கிட வேண்டி செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 453– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 454

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.A, பிளாக் எண். 3, நகரளவு எண்கள் 91–ல் உள்ள பரப்பளவில் 5780 சதுரமீட்டர் கொண்ட இடத்தை 29 குடியிருப்பு மனை பிரிவுகளாக பிரித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் சாலைகள் அமைக்க 1735.25 சதுரமீட்டர் இடமும் மற்றும் உள்ளாட்சி உபயோகத்திற்கு 28.14 சதுரமீட்டர் இந்நகராட்சிக்கு பத்திர பதிவுத்துறை மூலமாக 05.01.2024ம் தேதிய பதிவு ஆவண எண்.5682/2023–ல் தானமாக பதிந்து தேவகோட்டை நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட மனைபிரிவில் சாலைகள், மழைநீர் வடிகால்கள், தெருவிளக்கு வசதிகள் என மனுதாரரே மேற்கொள்ள தெரிவித்துள்ளபடியால் மேற்கண்ட ஆவணத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 454– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 455

தேவகோட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022 –23ன் கீழ் 3 ஊரணிகளை தூர்வாரி மராமரத்து செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் இந்நகராட்சிக்குட்பட்ட காட்டூரணி மற்றும் பெருமா கண்மாய் 2 ஊரணிகளையும் தூர்வாரி கரைகள் அமைத்து பேவர் பிளாக் நடைபாதை அமைத்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மழை பெய்து கரைகளை மண் அரிப்பிலிருந்து தடுக்கும் பொருட்டு கரைகளைபலப்படுத்திட புல் அச்சு பதித்து பராமரித்திட வேண்டி 2 ஊரணிகளுக்கும் கரைகளின் சரிவுகளில் புற்கள் பதித்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ)பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 455– அனுமதிக்கப்பட்டது.**

—

## பொருள் – 456

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 6–வது உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் அங்கன்வாடி அமைந்துள்ளது. அங்கன்வாடியின் கட்டிடம் கட்டி பல ஆண்டுகள் ஆன நிலையில் மராமத்து பணி பார்ப்பது அவசியமாகிறது. கட்டிடத்தில் ஆங்காங்கே பூச்சு பெயர்ந்தும் காணப்படுகிறது. தரையும் சற்று பெயர்ந்து காணப்படுகிறது. முன்புறம் மழைபெய்தால் சாரல் அங்கன்வாடி உள்ளே விழுகிறது. எனவே குழந்தைகள் நலன் கருதி பூச்சு, வர்ணம் பூசுதல், அங்கன்வாடி முன்பு ஷெட் அமைத்தல் என மராமத்து பணி செய்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–
அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ)கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 456– அனுமதிக்கப்பட்டது.**

—

## பொருள் – 457

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்காணும் சாலைகள் மண்சாலைகளாகவும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் பழுதடைந்த சாலைகளாகவும் உள்ளதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு சிரமாக உள்ளதால் கீழ்காணும் சாலைகளை மேம்பாடு செய்வது அவசியமாகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்–1, சோமசுந்தரம் நகர் குறுக்குப் பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 6.00 |
| 2. | வார்டு எண்–2, எம் எம் நகர் 2–வது தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 3. | வார்டு எண்–3, அண்ணாசாலை காமாட்சி அம்மன் நகர் பாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 5.90 |
| 4. | வார்டு எண்–4, செங்கற்கோவிலார் குறுக்கு தெருவில் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 5. | வார்டு எண்–5, அருணகிரிப்பட்டிணம் தெற்குத் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.40 |
| 6. | வார்டு எண்–6, காந்தி நகர் குறுக்கத் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.70 |
| 7. | வார்டு எண்–7, மாரியம்மன் கோவில் வடக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 8. | வார்டு எண்–8, விவேகானந்தபுரம் கிழக்கு தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 5.50 |

| | | |
|---|---|---|
| 9. | வார்டு எண்–9, ஸ்டேட் பேங் காலனி பூங்காவில் சிறுவர்கள் விளையாட்டு சாதனங்கள் அமைத்தல் பணி. | 6.00 |
| 10. | வார்டு எண்–10, அழகாபுரி குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.60 |
| 11. | வார்டு எண்–11, சிவகங்கை ராஜா ரோடு குறுக்குத்தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.20 |
| 12. | வார்டு எண்–12, விநாயகபுரம் குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.80 |
| 13. | வார்டு எண்–13, காசிலிங்கம் நகர் 1–வது வீதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.70 |
| 14. | வார்டு எண்–14, பிள்ளையார்கோவில் அருகில் மற்றும் புட்டுக்கடை சந்து சிறுபாலங்கள் அமைத்தல் பணி. | 4.50 |
| 15. | வார்டு எண்–15, சத்தியமூர்த்தி தெரு குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.20 |
| 16. | வார்டு எண்–16, காளிஅழகப்பன் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 17. | வார்டு எண்–17, சிலம்பனி வடக்கு சன்னதி குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 18. | வார்டு எண்–18, ரெகுநாதபுரம் மேற்கு குறுக்கு வீதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.40 |
| 19. | வார்டு எண்–19, அண்ணாநகர் 7–வது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 5.50 |
| 20. | வார்டு எண்–20, காந்தி ரோடு குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.30 |
| 21. | வார்டு எண்–21, குதிரை பாதை ரோடு சமயபுரம் மாரியம்மன் கோவில் வீதியில் சிறுபாலங்கள் அமைத்தல் பணி. | 5.40 |
| 22. | வார்டு எண்–22, சொர்ணநாதன் குறுக்குத்தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 23. | வார்டு எண்–23, அழகாபுரி நகர் தெற்கு குறுக்குத்தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.30 |
| 24. | வார்டு எண்–24, கைலாசநாதபுரம் மேற்கில் வடக்கு பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 5.20 |
| 25. | வார்டு எண்–25, கிருஷ்ணராஜபுரம் கிழக்கு வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 5.20 |
| 26. | வார்டு எண்–26, இம்ரான் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 5.40 |
| 27. | வார்டு எண்–27, கீழக்குடியிருப்பு குளக்கால் வீதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.90 |

மேற்காணும் பணிகளுக்கு மேற்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணிக்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் 457 – அனுமதிக்கப்பட்டது.**

––

பொருள் – 458

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உள்ள வீதிகளில் மாடுகள் சுற்றி திரிவதால் விபத்து ஏற்படுகிறது. பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் மாடுகள் சுற்றி திரிகிறது. பொதுமக்களின் நலன் கருதி விபத்து ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மாடு ஒன்றுக்கு ரூ.1000/– அபராதம் விதித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 458– அனுமதிக்கப்பட்டது.**

––

பொருள் – 459

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 04, செப்பவயலார் வீதி குறுக்குத்தெருவில் சாலை அமைத்து சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலான நிலையில் சாலை பழுதடைந்து மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. சில நேரங்களில் பாதசாரிகள் தடுமாறி கீழே விழும் நிலை ஏற்படுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது. இதனால் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 429– அனுமதிக்கப்பட்டது.**

––

**(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகராட்சி.**

**/உண்மை நகல் /**

**மேலாளர்,**
**தேவகோட்டை நகராட்சி**